யாழ்ப்பாணம் மாநகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வேலைகள் பூர்த்தியாக்கப்படாத 23 நிர்மாண வேலைகளுக்குரிய மற்றும் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படாத 09 கொள்வனவுகளுக்குரிய ரூபா 126,309,329 தொகையான மதீப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.	கொள்வனவுக்குரிய பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் உள்ளுர் அபிவிருத்தி உதவி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 36,181,046 ஆன மூலதன உதவு தொகைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	தொடர்ந்துவரும் காலத்தில் வருமானச் செலவுக் கணக்கில் உட்படுத்தப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் உள்ளுர் அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மற்றும் சபை நிதியின் கீழ்	2025 ஆம் ஆண்டில் சொத்தாக்கம் செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

	பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 114,432,350 பெறுமதியான 14 மூலதன வேலைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டிற்காக அறவிடப்பட்ட 04 வகையான நிலுவை வருமானங்கள் ரூபா 12,966,776 தொகை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் தாக்கல் செய்யப்பட்டமையினால் ஆண்டிற்கான வருமானம் அத் தொகையினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.	இவ் வருடத்தில் நிலுவை அறவீடு திரண்ட நிதிக்கு சாட்டுதல் செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் ரூபா 9,563,863 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 11 வகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் 03 மின்சார மோட்டர்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	இவ்வருடம் நாட்குறிப்பின் மூலம் கணக்குகளில் சேர்க்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஊ)	மாநகர சபைக்கு உரித்தான 45 காணிகளின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	உரித்து ஆவணங்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(எ)	நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 7,341 நூலகப் புத்தகங்களின் பெறுமதி மற்றும் ரூபா 1,868,567 கூட்டுமொத்த தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 3,057 நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	அனைத்து நூலகப் புத்தகங்களும் சொத்தாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	-மேற்படி-
(ஏ)	மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சபையில் காணப்பட்ட ரூபா 1,573,660 பெறுமதியான எரிபொருள், உராய்வு நீக்கி எண்ணை மற்றும் சேதனப்பசளை என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	இவ் வருட நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க விதவை அநாதை ஓய்வூதியச் சட்டம் 3(1)	5 அலுவலகரிடம் அறவிடப்பட்ட ரூபா 115,452 ஆன விதவை அநாதை ஓய்வுதிய பங்களிப்பானது விதவை அநாதை ஓய்வுதிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.	சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க (திருத்த சட்டத்தின்) பெறுமதி சேர் வரியின் விலக்களிப்பு C (XXXVII)	கழிவு அகற்றல் செயற்பாட்டிற்கு பயன்படுத்தும் உபகரணத்திற்கு பெறுமதி சேர்வரி விலக்கு அனுமதிக்கப்பட்டிருந்தமைக்கு மேலதிகமாக ரூபா 1,309,938 அறவிடப்பட்டு திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டிருந்தது.	திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571(1),(2),(3)	02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 15 காலங்கடந்த வைப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 3,012,529 சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.	வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	நகர அபிவிருத்தி அதிகார சபையின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமான பத்திரிகை 2021 யூலை 08 ஆந் திகதிய 2235 / 54 ஆம் இலக்கத்தின் பகுதி I இன் 11ஆவது விடயம்	குடிபுகு சான்றிதழ் பெறப்படாத 89 கட்டிடங்களுக்கு கால நீடிப்பு கட்டணம் ரூபா 3,785,000 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், கால நீடிப்பு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 351,486,195 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 418,843,362 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	101,670,627	255,900,379	116,360,694	139,539,685	98,573,826	68,896,902	87,000,775	145,644,642
(ii)	வாடகை	203,490,442	199,436,001	174,845,795	24,590,206	183,340,128	100,899,682	103,765,019	18,811,356
(iii)	உத்தரவுப் பத்திரக் கட்டணம்	31,782,000	41,795,925	41,650,925	145,000	28,398,000	22,870,236	23,083,236	185,000
(iv)	ஏனைய வருமானம்	384,298,500	415,929,114	391,610,487	24,318,627	378,925,622	295,789,760	298,451,832	8,715,753
	கூட்டுத்தொகை	721,241,569	913,061,419	724,467,901	188,593,518	689,237,576	488,456,580	512,300,862	173,356,751

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) **வீதவரி**		
மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி கணக்கின் மீதி ரூபா 139,539,685 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 57,320,525 ஆன 15,280 வீதவரி வளவுகளிலிருந்து 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதியொன்றும் 10 ஆண்டை விஞ்சிய பழைய ரூபா 82,219,160 ஆன மீதியொன்றும் காணப்பட்டிருந்தன.	இனிவரும் காலங்களில் நிலுவைத் தொகையினை இழிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது	நிலுவை வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(உ)	மீளாய்வாண்டில் மாநகர சபையினால் ஆதனவரி அறவிடப்பட்டிருக்க வேண்டிய 38,371 ஆதனங்களில் 14,141 ஆதனங்களிற்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.	K படிவம் வழங்குவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	K படிவம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
	மீளாய்வாண்டில் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 11,468,693 கடை வாடகை மற்றும் ரூபா 13,121,513 சந்தை குத்தகை நிலுவைகள் காணப்பட்டிருந்தன. இதில் வாடகை நிலுவை ரூபா 3,938,000 மற்றும் குத்தகை நிலுவை ரூபா 7,610,758 ஆகியன 05 வருடங்களிற்கு மேற்பட்டதாக காணப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.	-மேற்படி-
(இ)	**ஏனைய வருமானம்**		
	தியேட்டர் வருமதி மற்றும் விளம்பரக்கட்டணம் முறையே ரூபா 6,488,441 மற்றும் ரூபா 1,353,070 ஆனது 01 வருடத்திற்குட்பட்டதாக அறவிட வேண்டி காணப்பட்டிருந்தன.	-மேற்படி-	-மேற்படி-

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மாநகர சபைக் கட்டளை சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2022 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் சபைக்கு கிடைக்கப்பெற்ற 1,188 கட்டிட விண்ணப்பங்களில் 868 மாத்திரமே சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 320 விண்ணப்பங்கள் மீள சமர்ப்பிக்கப்படாமை, காணிப்பிரச்சினை, ஆவணக்குறைபாடுகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தாமதம்	குறைபாட்டினை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.	மிக விரைவாக பிரச்சினைகளினை தீர்த்து அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	போன்ற காரணங்களினால் அனுமதி வழங்கப்படாமல் காணப்பட்டிருந்தன.		
(ஆ)	1915 இன் 15 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15(1) இன் பிரகாரம், சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப கட்டிடமானது கட்டப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தி குடிபுகு இயைபுச் சான்றிதழ் (COC) வழங்கப்பட வேண்டியிருந்தும் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 868 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களில் 89 இற்கு மாத்திரம் குடிபுகு இயைபுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.	சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டதுடன் இந்நிலைமை சீர் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	குடிபுகு இயைபுச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	2009 நவம்பர் 26 ஆந் திகதியும் 1629/17 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமான பத்திரிகையின் பிரகாரம், மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் உரிமத்தினை உறுதிப்படுத்தும் விலங்குறுதிச் சீட்டு உரிமம் பெறப்பட்டிருக்காது 4,821 மாடுகள் உணவிற்காக வெட்டப்பட்டிருந்தன.	சீர் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டில் பண்ணை கொல்களத்தில் கொல்கள கட்டணம் மற்றும் கொல்கள அனுமதி பத்திர கட்டணத் தொகை அறவிடப்படாமல் 1,457 மாடுகள் வெட்டப்பட்டமையினால் மாநகர சபைக்கு ரூபா 1,048,312 ஆன வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.	சுகாதார வைத்திய அதிகாரியின் மேலான கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.	கொல்கள கட்டணம் மற்றும் கொல்கள அனுமதி பத்திர கட்டணங்களினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(இ)	மீளாய்வாண்டில் மாநகர சபையின் பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 331 மில்லியன் பெறுமதியான 12 மூலதன வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டிறுதி வரை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	வேலைத்திட்டங்களினை உரிய காலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஈ)	ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த கடந்த 10 தொடக்கம் 30 ஆண்டுகள் பழைய 28 முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 6,668,066 மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	முற்பணங்களை அறவிடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2016 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை நன்கொடை மற்றும் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தினூடாக நூலகம் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கென வழங்கப்பட்ட ரூபா 1,876,752 தெகையினை அவ் நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் மாநகர சபையின் பொது வைப்புக் கணக்கில் முடக்கி வைக்கப்பட்டிருந்தது.	வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	நிதியினை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஐ)	வறிதாக்கப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான செயற்பாட்டு பிணை முறியினை 02 வருடங்களுக்கு மேலாக வருமான கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வருமான கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

(அ)	மீளாய்வாண்டில் 05 இறைச்சிக்கடைகள் மற்றும் 04 பல்பொருள் வாணிபம் என்பன குத்தகைக்கு வழங்காமையினால் மாநகர சபைக்கு ரூபா 5,750,016 வருமான இழப்பொன்று ஏற்பட்டிருந்தன.	சபையினால் கேள்வி கோரப்பட்ட போதிலும் பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை.	வருமான மூலங்களை உத்தம மட்டத்தில் பேண நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மாநகர சபையின் தீயணைப்பு வாகனமொன்று விபத்திற்குள்ளானமை தொடர்பில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,194,000 நட்டஈட்டுத் தொகை 04 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டிருந்தது.	தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நட்டஈட்டுத் தொகையினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	196 கடைகளின் வாடகை உடன்படிக்கை 03 தொடக்கம் 35 வருடங்களிற்கு மேலாக மீள புதுப்பிக்கப்படாமல் வாடகை அறவிடப்பட்டு வருகின்றன.	ஒப்பந்தங்களை மீள புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	குருநகர் சந்தைக்கடை தொகுதியில் அமைந்துள்ள 41 கடைகள் மற்றும் 44 வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு 01 தொடக்கம் 10 வருடங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.
(ஆ)	22 எண்ணிக்கையான காணிகள் மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 26 வாகனங்கள் நாளதுவரை சபைக்குரித்தற்ற நிலையில் பயன்படுத்தப்பட்டிருந்தன.	சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.	சொத்துக்களின் உரிமைத்துவம் தீர்க்கப்படல் வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு பெறுகை வழிகாட்டு நெறிகள் 2006 இன் அத்தியாயம் 08 இன் பிரிவு 8.7.3 (ஆ) இன் பிரகாரம், ரூபா 500,000 தொகையினை விஞ்சுகின்ற எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகளிற்கான கொள்வனவின் போது விதிமுறைப்பட்ட ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்பட வேண்டியிருந்தும் மாநகர சபையினால் ரூபா 5,770,200 பெறுமதிக்கு 02 வகையான பொருட்கள் கொள்வனவு தொடர்பில் வழங்குனருடன் விதிமுறைப்பட்ட ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர் வரும் காலங்களில் பெறுகை நடைமுறை சரியாக பின்பற்றப்படும்.	பெறுகை வழிகாட்டு நெறிகள் பிரகாரம், விதிமுறைப்பட்ட ஒப்பந்தமொன்று நிறைவேற்றப்பட வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 148 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தன.	ஆளணி தொடர்பான உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மேலதிகமாக காணப்படும் 26 அபிவிருத்தி உத்தியோகத்தகர்கள் பதவியணியினருக்கான அனுமதி கணக்காய்வுத் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆளணி தொடர்பான உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.	மேலதிகமாகவுள்ள பதவியணியினருக் கான அனுமதியினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	மாநகர சபையின் வாகனப்பகுதியில் சாரதி மற்றும் பதில் சாரதிகள் உட்பட 40 பேர் கடமையாற்றுகின்ற போதும் இதற்கு மேலதிகமாக வெளிவாரி அடிப்படையில் 10 சாரதிகள் நியமிக்கப்பட்டமையினால் நாளாந்த வேலை நேர அட்டவணை மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் 32 சாரதிகள் 847 நாட்கள் கடமையில் ஈடுபடாமல் அலுவலகத்தில் தரித்திருந்தனர்.	தேவையின் அடிப்படையில் சாரதிகள் அலுவலகத்தில் தரித்திருந்தனர்.	இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாநகர சபையினால் தாயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதியும் 01/2014 ஆம் இலக்கமும் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் திட்டம் அமுல்படுத்தப்படும் கால அட்டவணை மற்றும் அதன் செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி / விளைவுகள் குறிப்பிடப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சுற்றறிக்கையின் பிரகாரம், செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 05 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 38 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 23 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையும் விலகல்களும் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் 66 சதவீதமான விலகல் இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பாதீட்டு கட்டுப்பாட்டினை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு கவனத்துடன் பாதீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 சுற்றாடல் சிக்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	திண்மக் கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த கல்லுண்டாய் பிரதேசத்தில் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	குறைபாடுகள் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நுளம்பு பரவலை தடுத்தல், துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கழிவுப் பொருள் உற்பத்தி செய்ய முடியாத உக்காத கழிவுப் பொருட்களை திறந்த நிலத்தில் போட முடியாதிருந்ததுடன், இயலுமான வரை மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை வேறாகப் பிரித்து மீள்சுழற்சிக்கு அனுப்பவேண்டிய போதிலும், அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் எரியூட்டப்பட்டு வருகின்றன. இதன் விளைவினால் அங்கு பாரிய தீ விபத்து ஏற்பட்டு 08 தடவைகள் கட்டுப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	கழிவுகளை மீள்சுழற்சிக்கு உற்பத்திக்கு அல்லது மாற்று பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க 26 மர ஆலைகள், 19 அரிசி ஆலைகள், 17 வெதுப்பகம், 02 வாகன சுத்திகரிப்பு நிலையம், 51 மின் ஒட்டு வேலைத் தளம் மற்றும் 06 சடலங்களுக்கு தைலமிடல் நிலையம் என்பனவற்றின் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.	தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.